# கலைஞன் கேகையலிங்கம்

**ஆழத்து முத்துக்கள் 115**

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

எனது சிறுவயதில் பாடசாலை மாணவனான இருந்த இதயலிங்கம் ஒருநாள் கழுத்தில் பூசிய அரிதாரம் அழியாத நிலையில் வகுப்புக்கு வந்திருந்தார். கேட்டதற்கு முதல் நாள் இரவு நடைபெற்ற தனது தந்தையாரின் நாடகத்தில் நடித்ததாக இதயன் சொன்னார். எமக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது, வகுப்பில் மிகவும் அமைதியாக இருப்பவன் மேடையேறி நடிக்கிறானே என்று. இந்த நாடக ஈடுபாடு எமக்குள் நட்பை இறுக்கமாக்கி அவரது வீடுவரை செல்கின்ற அளவுக்குச் சென்றது.

நல்லூர் கல்வியம்பதிக்கு அண்மித்த கட்டப்பராய் என்ற இடத்தில் 3ம் கட்டையடியில் அவரது வீடு இருந்தது. வீட்டுக்குப் பெயர் ‘கலைக்குவியல்’. வீட்டின் ஒரு பகுதியில், முகட்டில் எல்லாம் நாடகப் பொருட்கள் தொங்கியபடி கிடந்தன. பெயருக்கு ஏற்ப வீடும் கலைக்குவியலாக இருந்தது.

அந்த வீட்டுக்கு அருகில் இலங்கநாயகி மனோன்மணி அம்மன் கோயில் உள்ளது. இலங்கநாயகி அம்மன் என்ற பெயரில் வேறு அம்மன் கோயில்கள் இலங்கையில் இருக்கிறதா என்று தெரியவில்லை. அந்தக் கோயிலில் வருடாவருடம் நடைபெறும் மகா சிவராத்திரி விழா மிகவும் பிரசித்தமானது. அன்று பகலில் வீதியில் இடம்பெறும் விளையாட்டு, விநோத உடைப் போட்டிகளுடன் அந்த விழா ஆரம்பமாகும். அன்று இரவு வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் நாடகங்கள் இடம்பெறும். நான்கு சாமப் பூசைகளுக்கு மட்டும் கோயிலுக்குள் செல்லும் பக்தர்கள் பூசை முடிந்ததும் வீதிக்கு வந்து நாடகங்களைப் பார்த்து நித்திரை கொள்ளாது மகிழ்வுற்றார்கள். காலையில் வழங்கப்படும் அன்னதானத்துடன் சிவராத்திரி விழா இனிதே முடிவுறும்.

இத்தகைய புகழ்பெற்ற மகாசிவராத்திரி விழாவின் நாயகன் தான் கலைஞன் கேகையலிங்கம். நான் முன்னர் குறிப்பிட்ட நண்பன் இதயனின் தந்தையார்.

மேடையில் முடிதரித்து மன்னனாக கர்ஜிக்கும் கேகையலிங்கம் அந்தப் பகுதியின் முடிசூடா மன்னனாக விளங்கியவர். ஊரில் இடம்பெறும் எந்தச் சச்சரவுகளையும் தீர்த்து வைக்கிற வல்லமைமிக்கவராக அவர் திகழ்ந்தார்.

1931ல் கட்டப்பராயில் பிறந்த நாகரத்தினம் கேகையலிங்கம் தனது ஆரம்பக்கல்வியை கல்வியம்பதி சைவப் பாடசாலையிலும் உயர்கல்வியை யாழ். பரி. யோவான் கல்லூரியிலும் பயின்றவர். ஆங்கில மூலக் கல்வியில் தேர்ச்சி பெற்ற இவர் தனது 20 வயதில் கொழும்பு சினிமாஸ் லிமிட்டற்றில் வேலைக்குச் சேர்ந்தார்.

பரி.யோவான் கல்லூரியில் பயிலும் காலத்தில் சித்திரம் வரைதலில் சிறந்த மாணவனாக விளங்கினார். கல்லூரியின் சித்திர ஆசிரியர் நல்லையா அவர்களின் தீட்டுதலில் வீரியம் பெற்ற இவர் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற சித்திரப் போட்டியில் பரிசு பெற்றிருந்தார்.

தனது 14 வது வயதில் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்த கேகையலிங்கம் பாடசாலைகள், ஊர் மன்றங்கள் மற்றும் கல்வியம்பதி ஞானபாஸ்கரோதயம் சங்கம் போன்றவற்றின் கலைவிழாக்களில் இடம்பெறும் நாடகங்களில் பங்குகொண்டார். இவரே நாடகங்களையும் தயாரித்து மேடையேற்றினார்.

1960ல் கலைக்குவியல் நாடக மன்றத்தை ஆரம்பித்து பல தரமான நாடகங்களை மேடையேற்றினார். ஆரம்ப நாட்களில் தனது விசாலமான வீட்டு வளவுக்குள் நாடக விழாக்கள் நடத்தினார். சமூக, சரித்திர, இதிகாச, புராண நகைச்சுவை நாடகங்கள் என்று பலதரப்பட்ட ரசங்கள் நிறைந்த நாடகங்களில் கதாநாயகன் வேடமேற்று மக்கள் மனதில் திறமையான கலைஞனாக மிளிர்ந்தார்.

மனோன்மணி, பூம்புகார் போன்ற சரித்திர, இதிகாச நாடகங்களும் பிரகலாதன்,சகுந்தலை, காளிதாஸ், மார்க்கண்டேயன், திருவிளையாடல், சத்தியவான் சாவித்திரி போன்ற புராண நாடகங்களும் பூசாரி பொன்னையா போன்ற நகைச்சுவை நாடகங்களும் அவள் சென்ற பாதை போன்ற சமூக நாடகங்களும் இவருக்குப் புகழ் சேர்த்த நாடகங்களுள் சிலவாகும். மகாசிவாராத்திரி விழாவுக்காக இவர் ஏராளமான புராண நாடகங்களை மேடையேற்றினார். இவரது நாடக ஆர்வத்துக்கு ஆசிரியர் சரவணபவன் அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்திருந்தார். கேகையலிங்கம் தனது நாடகங்களில் தன் பிள்ளைகளுக்கும் சிறு சிறு




பாத்திரங்கள் கொடுத்து நடிக்க வைத்தார். இவரது கலைக்குவியல் நாடகமன்றத்தின் மூலம் நடிப்புக்கலை பயின்று புகழ்பெற்ற கலைஞர்கள் பலர். இவர்களில் கணபதி ரவீந்திரன், செல்வராஜா, மனோகரன், பாலச்சந்திரன், யோகேந்திரராஜா, குலேந்திரன், நவரத்தினம், கைலாயநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அந்நாட்களில் நாடகங்கள் போடுவது என்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. தென்னை மரங்களைத் தறித்து அவற்றைத் துண்டுகளாக்கி, ஆழமாக நிலத்தில் தாட்டு, கொத்தனார் வேலைசெய்யும் ஒருவரிடம் பலகைகளை இரவல் பெற்றும், மரக்காலை வைத்திருக்கும் நண்பரிடம் மரங்கள் பெற்றும் மேடை அமைப்பது கடினமானதொன்று. இதற்கே இரண்டு நாட்களும், பலரின் உடல் உழைப்பும் தேவைப்படும். அதுவும் கொழும்பில் வேலை செய்துகொண்டு ஊரில் விழாவை நடத்துவது கல்லில் நார் உரிக்கிற காரியமே. எனினும் இதனை கேகையலிங்கம் பல வருடங்களாக வருடம்தோறும் மிகவும் சிறந்த திட்டமிடலுடன் சிறப்பாகச் செய்துவந்தார். இவரது விழாவுக்கான ஒலியமைப்பை ரேடியோஸ்பதி நிறுவனமும் ஒளி அமைப்பு, திரைச்சீலை, மேக்கப் போன்றவற்றை பென்சமின் உம் கையாண்டுவந்தனர்.

கொழும்பில் சினிமாஸ் லிமிட்டற் இல் இவர் வேலை செய்த நாட்கள் கலையின் வேறு பரிமாணத்தைக் கொண்டது. கொட்டாஞ்சேனையிலுள்ள அலுவலகத்தில் குமாஸ்தாவாகத் தொழிலை ஆரம்பித்த இவர் பின்னர் தியேட்டர் மனேஜராக உயர்வு பெற்றார். இறுதியாக சினிமாஸ் லிமிட்டற் நிறுவனத்தின் விஜயா ஸ்ரூடியோவில் புரடக்ஷன் மனேஜராக உயர்ந்து இளைப்பாறினார். இந்நாட்களில் பல சிங்களப் படங்கள் வத்தளையிலுள்ள அந்த ஸ்ரூடியோவில் படமாக்கப்பட்டன. காமினி பொன்சேகா, விஜய குமாரணதுங்க, ஜோ அபயவிக்கிரம, மாலினி பொன்சேகா, விஜிதமல்லிகா, ஜீவாரானி, சந்தியாகுமாரி போன்ற பிரபல கலைஞர்களினதும், லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் போன்ற சிறந்த நெறியாளர்களினதும் படங்களில் புரடக்ஷன் மனேஜராகப் பணியாற்றினார். இவரது செயலாற்றல் காரணமாக பெரும் சிங்களக் கலைஞர்களாலும், தொழில் நுட்பவியலாளர்களாலும் ‘லிங்கம் மாத்தையா’ என்று அன்பாக அழைக்கப்பட்டவர் இவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் திறம்படப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் புலமைபெற்ற கேகையலிங்கம் அவர்களின் ஆற்றலுக்காக காமினி பொன்சேகா நடித்த ‘இன்றைவிட நாளை சிறந்தது’ என்ற சிங்களப்படத்துக்காகப் பாராட்டுப் பெற்றவர்.

நாடகக்கலை, திரைப்படக்கலை என்பவற்றுடன் நின்றுவிடாமல் இவர் ‘மாசலாட்’ போன்ற தற்காப்புக்கலை மற்றும் மல்யுத்தக்கலை என்பவற்றையும் முறைப்படி பயின்றார். கொழும்பு Y.M.C.A ல் இதற்கான பயிற்சியை இவர் பெற்றார். அது மட்டுமல்லாது தமிழரின் பாரம்பரிய தற்காப்புக் கலையான சிலம்பத்தையும் கற்றுத்தேர்ந்தார்.


சிறந்த கடவுள் பக்தராகவும், ஜீவகாருண்யம் மிக்கவராகவும் விளங்கியவர் கேகையலிங்கம் அவர்கள். ஒருமுறை நாடகக் குழுவுடன் நுவரெலியா சென்ற போது இவர்கள் பயணம் செய்த பஸ் வண்டி தடம்புரண்டு பெரும் பள்ளத்தாக்கினுள் விழுந்தது. எனினும், எல்லோரும் அன்று உயிர்தப்பினர்.

இவரது ஜீவகாருண்யத்துக்கு இன்னுமொரு சம்பவத்தைக் குறிப்பிடுவார்கள். இந்திய இராணுவ காலத்தில் சந்திரசேகரப்பிள்ளையார் கோயிலில் இவர் தஞ்சம் புகுந்திருந்த நாட்களில் அது நடந்தது. ஒரு வெளிநாட்டுத் தம்பதியினர் தமது பிள்ளையுடன் காரில் வந்தபோது, அந்தக் காரை இந்திய இராணுவம் வெடிவைத்துத் தகர்த்தது. தம்பதியினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். திருநெல்வேலியில் ராமசாமிப் பரியாரி வீட்டுக்கு அண்மையில் நடைபெற்ற அச்சம்பவத்தின்போது அந்தப்பிள்ளை தூக்கி வீசப்பட்டு தோட்டம் ஒன்றில் விழுந்து கிடந்தது. சிறு காயங்களுடன் தப்பிய அந்தக் குழந்தையை தன் பிள்ளை போல் பராமரித்தவர் கேகையலிங்கம் அவர்கள். பல மாதங்களின் பின்னர் வெளிநாட்டிலிருந்த பெற்றோரின் சொந்தக்காரர் வந்து பிள்ளையைப் பொறுப்பெடுத்த போது வந்தவர்கள் நன்றிக்காக இவருக்குப் பணம் கொடுக்க விரும்பினர். ஆயினும் கஷ்டமான சூழ்நிலையிலும் காசை அவர் வாங்கவில்லை. அப்படியான ஒரு ஜீவகாருண்யவாதி அவர்.

இவ்வாறு பல முகங்கள் கொண்ட கேகையலிங்கம் அவர்களின் செயற்பாடுகளுக்குப் பின்தளமாக நின்று செயற்படுபவர் அவரது துணைவியாரான கமலாட்சி ஆகும். அவர் கொழும்பில் வேலை செய்த நாட்களில் ஊரில் நாடகங்களின் ஆரம்ப வேலைகளை மிகவும் முனைப்புடன் செய்துவந்தவர் அவரது துணைவியாரே. நாடகப் பிரதிகளைப் பார்ப்பது, நாடகங்களைப் பழக்குவது, மேக்கப் போடுதல், போன்ற சகல வேலைகளையும் செய்யும் வல்லமை பெற்றவர் அவர்.

இத்தம்பதியினருக்கு வேல்விழி, அருள்மொழி என்னும் பெண்பிள்ளைகளும் நான்கு ஆண்பிள்ளைகளும் உள்ளனர். தந்தையைப் போல் இவரது ஆண்பிள்ளைகள் அனைவரும் கலைகளில் சிறந்து விளங்குகின்றனர். திரைப்படம், நாடகம், இசை, புகைப்படம் என்று புகழ்பெற்ற கமலன், நாடகக் கலைஞன் இதயன், வீடியோ, புகைப்படக் கலைஞன் ருத்திரன், வானம்பாடி புகழ் நர்த்தனன் ஆகியோர் இவரது புதல்வர்களாகும்.

இங்கு சி.என். டவரில் வேலை செய்து ஓய்வு பெற்ற கலைஞன் கேகையலிங்கம் அவர்கள் தற்போது அமைதியாக வாழ்வைக் களித்துவருகிறார்.



sriskandan@thaiveedu.com